**புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2018**

---

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்தல், போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல், முதலீடு மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் வறுமை மற்றும் வேலையின்மையினை குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நெடுஞ்சாலையின் கட்டம் - 1 இன் கிரயம் ரூபா 55 பில்லியனிற்கிடையில் இருந்ததுடன் 2021 நவம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

---

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

---

2016 மார்ச் 02 இல் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சரவை அமைச்சர்களினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலையின் நிர்மானத்திற்கான முன்மொழிவின் பிரகாரம், நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரை 6.9 கிலோமீற்றர்கள் மற்றும் ராஜகிரிய தொடக்கம் அதுருகிரிய வரை 10.4 கிலோமீற்றர்கள் ஆகிய 02 கட்டங்களின் கீழ் அமுல்படுத்த பட்டியலிடப்பட்டுள்ளது. கட்டம் I இன் கீழான சாத்தியவள கற்கை மற்றும் வடிவமைப்புக்கள் 2015 இல் தெற்கு நெடுஞ்சாலை விஸ்தரிப்பின் கீழ் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கட்டம் II ற்கான சாத்தியவள கற்கையின் தயாரிப்பிற்கான ஒப்பந்தமானது 2018 மே 01 இல் ரூபா 98.7 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டு உதவியுடனான ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இறுதி அறிக்கை பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தின் பெறுபேறான திட்டத்தின் அடிக்கடியான மாற்றம் காரணமாக 294 நாட்கள் தாமதத்துடன் 2019 ஆகஸ்ட் 22 இல் கையளிக்கப்பட்டிருந்தது. நெடுஞ்சாலை நிர்மான வேலைகளின் ஒப்பந்தமானது கட்டுதல் - செயற்படுத்தல் - கையளித்தல் எனும் அடிப்படையின் கீழ் அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனவே 23 ஆர்வத்தின் வெளிப்பாடுகள் 2018 திசெம்பர் 31 இல் பெறப்பட்டிருந்ததுடன் 2019 செப்டம்பர் 30 வரை ஆர்வத்தின் வெளிப்பாட்டினை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்

---

| கணக்காய்வு விடயங்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு மீதான செயற்பாடு செயற்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்தான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு 2019 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு கூட பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 3.71 மில்லியன் கிரயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினனால் தயாரிக்க உடன்பட்டிருந்த மீளவழங்கள் செயற்திட்டம் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் செயற்பாடுகளினை பூர்த்தியாக்களில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2 ½ வருடங்கள் தாமதத்துடன் 2019 | நிர்மான வேலைகளின் ஆரம்பிப்பில் தாமதத்திற்கான சாத்தியம். | மீளவழங்கள் செயற்பாட்டிற்காக சேகரிக்கப்பட்ட தரவுகள் காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்களினை அமுல்படுத்த போதுமானதாக காணப்படாததுடன் அதனை சரிசெய்ய ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மீளவழங்கள் செயற்பாட்டுத்திட்டம் என்பவற்றை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

சனவரியில்
பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**2.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| **கணக்காய்வு விடயங்கள்** | **விளைவு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** |
| --- | --- | --- | --- |
| 2018 - பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 400 மில்லியனில் ரூபா 288.25 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வரிசை அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான பற்றாக்குறையான ஒரு செயற்பாட்டுத்திட்டத்தின் காரணமாக ஒதுக்கீட்டில் 13 சதவீதத்தினை பிரதிநிதிப்படுத்தும் மொத்தமாக ரூபா 53.03 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதி முகாமைத்துவத்தின் மீது பலவீனமாக கட்டுப்பாடுகள். | முறையாக கருத்துரைக்கவில்லை. | விரிவான ஒரு செயலாற்றல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்த ஒதுக்கீடுகள் அதன்படி கோரப்படலும் வேண்டும். |